## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
## அசல் வழக்கு எண். 338 /2021

**2023–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் வெள்ளிகிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : சர்க்கரை ஆலையில் பணியாற்றி தற்போது பணி ஒய்வு பெற்று விட்டேன். |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : பெருமாள் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : முருக்கன்குடி | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 61/2023 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டதுதான் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி எனது மனைவி ஆவார். தனக்கோடி பிறந்த ஊர் ம. புடையூர் ஆகும். தாவா 2 ம் அயிட்ட சொத்து குறித்து எனது மனைவி ஒரே பத்திரம் தான் கிரயம் செய்துள்ளார். மேற்படி சொத்திற்குரிய சர்வே எண்கள். 315/8, 315/9 ஏ, 315/9 பி ஆகும். சர்வே எண். 315/9 ஏ வில் மொத்தம் 20 சென்ட் காண்பிக்கப்பட்டு எனது மனைவி 10 சென்டுதான் வாங்கினார் என்றால் சரிதான்.
2) தாவா 2–ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனது மனைவி பெயரில் தான் கிரயம் ஏற்பட்டுள்ளது எனது பெயரில் எந்த கிரயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் 2–வது பக்கம் 4 வது பாராவில் இந்த வாதியின் கணவர் முத்துசாமியும் அவரது மகன்களான பெரியசாமி, செந்தில் ஆகியோர்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எனக்கு 12.04.2005 ல் கிரயம் கொடுக்கும்போது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவி தான் கிரயம் பெற்றார்.
3) இவ்வழக்கில் அட்டவணை ஏ மற்றும் அட்டவணை பி மற்றும் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அருகருகே உள்ள நிலங்கள் என்றால் சரிதான். சர்வே எண். 315/8, 315/9 ஏ, 315/9 பி ஆகியவை வாதியிடம் இருந்து கிரயம் வாங்கியது என்றால் சரிதான். வாதியிடம் இருந்து கிரயம் வாங்குவதற்கு முன்பு சர்வே எண். 315/2, 315/3, 315/4, ஆகிய

DMCUMUKVANAM

நிலங்களுக்கு வாதி சர்வே எண். 315/9 ஏ, ல் இருந்து தண்ணீர் பயன்படுத்தினார்கள் என்றால் சரிதான்.

4) எனது மனைவி கிரயம் வாங்கும்போதே 315/9 ஏ  சென்ட் 20  ல் பாதி உரிமை மட்டும்தான் கிரயம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அதே பத்திரத்தில் எங்களுக்கு இன்னும் மீதமுள்ள நிலங்களுக்கு செல்லும் மாமூல் பாதை வழியாக ஆடு மாடு ஓட்டியும் நடந்து செல்லும் பாத்தியம் நீங்கலாக மேற்கண்ட தொகைக்கு கிரயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண். 315/9 சி –ல் பூஸ்துதியில் பாதை என்பது அறவே இல்லை. உண்மையில் வாதி வழக்குரையில் கூறுவதுபோல் தென்வடலாக 285 அடியும் கிழமேல் 5  அடியும் பாதை சர்வே எண். 315/9 சி ல் இருப்பின் அதனை நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று நிரூபித்திருப்பார். பூஸ்துதியில் அப்படி ஒரு வழித்தடமே இல்லை எனக்கூறியுள்ளேன், என்றால் சரிதான். மேற்படி  வழக்கானது வாதியினுடைய பாதை அனுபவத்தை பிரதிவாதி இடையூறு செய்தார் என்பதற்காக போடப்பட்ட வழக்கு இது பொதுமக்கள் பயன் பாட்டிற்காக பயன் படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரி இருக்க வேண்டும் ஆனால் இது அண்ணன் தம்பி பாதை வழியாக நடந்து செல்வதை தடை செய்ததால் இதில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6) வா.சா.ஆ 1 முத்துசாமியின் பெயரில் கொடுக்கப்பட்ட தனிப்பட்டா என்றால் இல்லை அது கூட்டுப்பட்டாவாகும். சர்வே எண். 315/9 ஏ தனிப்பட்டா என்றால் இல்லை  அது கூட்டுப்பட்டாவாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 முத்துசாமியின் பெயரில் உள்ள தனிப்பட்டா என்று சொன்னால்  சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி வழக்கில் சொல்லியுள்ள தான பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்று சொல்லி இருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பத்திரம் அமுலுக்கு வந்ததால் தான் நாங்கள் அந்த சொத்தை கிரயம் பெற்றோம் என்று சொன்னால்  சரியல்ல.

7) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் கணவர் தனது நிலத்தை விற்பதாக என்னை அணுகினார், அப்போது வாதியின் கணவர் இது பூர்வீக நிலம் என்று கூறியதால் எனக்கு வாதியின் கணவர் மற்றும் அவரது வாரிசுகள் சேர்ந்து கிரய பத்திரம் எழுதி தரவேண்டும் என சொன்னேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் நான் கிரயம் பெற்ற 12.04.2005 ம் தேதி முதல் வாதி உட்பட ஊரில் உள்ள அனைவரும் அறிய எவ்வித இடையூறும் இல்லாமல் அனுபவித்து வருகிறேன் இதில் 11 வருடம் கழித்து வாதிக்கு எதிராக எங்களுக்கு அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது எனக்குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி 11 வருட காலம் வாதி பாதையை அனுபவம் செய்து வந்ததை தடுக்காததால் தான் அவர் வழக்கு எதுவும் தாக்கல்

WWW.LIVELAW.IN

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கிரயம் பெற்ற தேதியில் இருந்து இன்று வரை வாதி அந்த இடத்திற்கு வந்ததே கிடையாது.

8) 01.06.2009 ம் தேதி முருக்கன்குடி கிராமத்தில் வசிக்கும் செல்வராஜ் மனைவி தனக்கோடி என்பவருக்கு மேற்படி கிராமத்தை சேர்ந்த பொன்னுசாமி படையாச்சி மனைவி பச்சையம்மாள் என்பவர் தான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பச்சையம்மாள் கணவரின் பெயர் தங்கவேல் ஆகும். மேற்படி பத்திரத்தில் சர்வே எண். 315/9 ஏ 8 ஏர்ஸ் க்கு 20 சென்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் சர்வே எண்,315/10 ல் 16 ஏர்சுக்கு 40 சென்டும் பத்திரத்திற்கு கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 315/9 ஏ 20 சென்டும் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் அவரது பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) மேற்படி சர்வே எண். 315/9 ஏ முற்றிலும் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் இவ்வழக்கில் பச்சையம்மாள் என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 315/10 எனது மனைவி தான பத்திரமாக பெறும்போது அதில் சர்வே எண். 315/9 ஏ வையும் மோசடியாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்படி விபரங்களை எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

10) வாதியின் குடும்பத்தில் இருந்து கிரயம் பெறும்போது அவர்கள் தக்க வைத்துக்கொண்ட உரிமைகளை தடுப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் கிரயம் பெறாத சொத்திற்கு நான் சொல்லும் சாட்சியம் ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு படி தீர்ப்பா வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM